# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை
**********************

## பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வலுவூட்டல்: இந்திய உயர் ஸ்தானிகராலயம் CEWET புலமைப் பரிசிலை 700 மாணவர்கள் வரை அதிகரித்தது

இலங்கை பெருந்தோட்ட சமூகத்தின் சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான நிலையான அர்ப்பணிப்பினை மீள உறுதிப்படுத்தும் வகையில் இந்திய உயர் ஸ்தானிகராலயம் இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் கல்வி நிதியத்தின் CEWET புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றினை 2026 ஆகஸ்ட் 10 ஆம் திகதி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடத்தியது. இந்த நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் திரு சுந்தரலிங்கம் பிரதீப் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். அத்துடன் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா, துணை உயர் ஸ்தானிகர், CEWET முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் உள்ளிட்டோர் CEWET தேசத்துக்கு ஆற்றும் சேவையின் 79 ஆண்டுகளைக் குறிக்கும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

02. இந்த வருடம் எப்ரலில் இந்திய துணை ஜனாதிபதி மாண்புமிகு சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அறிவிக்கப்பட்ட CEWET புலமைப் பரிசில் மேம்பாட்டு திட்டத்தினை அமுல்படுத்துவதே இந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக காணப்பட்டது. இந்த திட்டத்துக்காக இந்திய அரசாங்கம் 200 மில்லியன் இந்திய ரூபாவை நன்கொடை உதவியாக ஒரே தடவையில் வழங்கி CEWET நிதியத்துக்காக ஒதுக்கியதன் மூலமாக வருடாந்தம் பயனடையும் மாணவர்கள் எண்ணிக்கையானது 350 இலிருந்து 700 ஆக இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டது. அத்துடன் உயர் தர மாணவர்களுக்கான மாதாந்த புலமைப் பரிசில் 2500 இலங்கை ரூபாவாகவும் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கு 7500 இலங்கை ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டமையானது, பெருந்தோட்ட இளைஞர்களின் மேம்பாட்டுக்கு உறுதுணையாக காணப்படுகின்றது.

03. இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தினர் ஒரு வாழும் உறவுப் பாலமாக திகழும் நிலையில் இந்தியாவும்

இலங்கையும் ஆழமான நாகரீக உறவுகளை பகிர்வதாக இங்கு உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அழிக்க முடியாத சொத்தே அறிவு என இங்கு குறிப்பிட்ட அவர் இந்திய ரூபா 75 கோடி உதவியின் கீழ் குறிப்பாக 2000 ஆசிரியர்களுக்கான STEM பயிற்சி , 10000 க்கும் அதிகமான மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் விநியோகம், 9 பெருந்தோட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மற்றும் 60 ஸ்மாட் வகுப்பறைகள் அமைக்கப்பட்டமை உட்பட இந்தியா முன்னெடுக்கும் கல்வி உதவி திட்டங்கள் தொடர்பாகவும் தெரிவித்திருந்தார்.

04. இதேவேளை, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய அரசாங்கத்தின் நீடித்த ஆதரவிற்கு கௌரவ பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்கள் நன்றியைத் தெரிவித்ததோடு, இருதரப்பு உறவை ஒரு சகோதரத்துவப் பிணைப்பு என்றும் குறிப்பிட்டார். மேலும், கௌரவ சந்தோஷ் ஜா அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டிய பிரதி அமைச்சர், கல்வியில் முதலீடு செய்வது நீண்டகால சமூக மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டதுடன் பின்தங்கிய நிலைகளைக் களைவதற்கும், அதன் தடைகளை உடைப்பதற்கும், சமூக சமத்துவத்தை உறுதி செய்வதற்கும் கல்வியே மிகவும் பயனுள்ள கருவியாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

5. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வானது, இலங்கை-இந்தியா இடையேயான நெருக்கமான கல்வி ஒத்துழைப்பிற்கு மற்றொரு அத்தியாயத்தைச் சேர்த்ததுடன், ICCR புலமைப்பரிசில், ITEC தொழில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பரந்தளவிலான மனிதவள அபிவிருத்தி முயற்சிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கின்றது.

*************

கொழும்பு
14 ஆகஸ்ட் 2026